**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**
**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூன் 06 ம் நாள் சனிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.41/2024**

**CNR No. TNVL 24– 001799–2024**

**அரசுக்காக,**
**காவல் ஆய்வாளர்,**
**காட்பாடி காவல் நிலையம்,**
குற்ற எண்.556/2021,
U/s. 279, 304 (A) IPC

……குற்றமுறையிடுபவர்

//எதிராக//

பெரியண்ணன், த/பெ. பரமசிவம்
நெ.11A, 3 வது குறுக்குத் தெரு,
விஜயராகவபுரம், சாலிகிராமம்,
சென்னை.

……..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl. No. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காட்பாடி காவல் நிலையம், குற்ற எண்.556/2021, U/s. 279, 304 (A) IPC | பெரியண்ணன் | பரமசிவம் | -- | நெ.11A, 3 வது குறுக்குத் தெரு, விஜயராகவபுரம், சாலிகிராமம், சென்னை. | 40 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்கு அனுப்பி வைத்த நாள் | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | காலத்தாழ்விற்குரிய காரணம் |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 27.09.2021 | 27.09.2021 | -- | -- | -- | 03.08.24 | 03.06.26 | 06.06.26 | -- | No Delay |

இவ்வழக்கு கடந்த 11.05.2024 ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் தொடுப்பவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.கார்த்திக் என்பவர் முன்னிலையிலும் தரப்பினர்களைக் கேட்ட பின்னர் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இன்று இம்மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

சாம்சன் என்பவர் வேலூர் C.M.C மருத்துவமனையில் பணிமுடிந்து 27.09.2021 தேதி இரவு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது காட்பாடி TO திருவலம் ரோடு காட்பாடி VIT அருகில் சுமார் இரவு 8.15 மணிக்கு மேற்க்கில் இருந்து கிழக்கு நோக்கி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ராயல் என்பீல்டு TN-23-CQ-4087 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு எதிரிரே கிழக்கில் இருந்து மேற்க்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் Honda Activa TN-10-BF-9925 என்ற வாகனத்தை ஒட்டுனர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த சாம்சன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் பிரிவு 279,337 இதச படியும் அதே சம்பவத்தில் சாம்சன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியதால் பிரிவு 304(A) இதச படியும் குற்றம் எனவே எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச பிரிவுகளின் படி குற்றம். புரிந்துள்ளார் என குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கி அவைகளை பரிசீலனை செய்து

பார்க்க தகுந்த  சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளித்து எதிரி மீதான குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். மேலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)  ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி தான் குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**4.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின்  சாட்சியங்களின் சுருக்கம்**

அ.சா.1 புருஷோத்தமன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். கரிகிரி மருத்துவமனையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது வயது மூப்பின் காரணமாக வீட்டின் உள்ளேன். விபத்தில் இறந்து போன சாம்சன் தனது இளைய மகன். 27.09.2021 ம் தேதி தனது மகன் சிஎம்சி மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்தார். பணி முடித்து சிஎம்சி மருத்துவமனையில்

இருந்து சேவூர் நோக்கி புல்லட்இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும்போது விஐடி மெயின் கேட் அருகே வரும்போது ஒருவர் வந்து இடித்து விட்டார் என அங்கிருந்தவர்கள் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தானும் தனது மனைவியும் சம்பவ இடம் சென்று பார்த்து போது தனது மகன் தலையில் அடிப்பட்டு மயங்கிய நிலையில் காணப்பட்டார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது மகன் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். பின்னாளில் சோமோடோ விநியோகம் செய்பவர் விபத்து ஏற்படுத்தியதாக கேள்விபட்டேன். சம்பவம் தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான் என்றும் என்றும், அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 செல்லத்துரை இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். கிறிஸ்தவர் பாதிரியாக இருந்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் அவர் தனது நண்பர். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம் தேதி தான் தனது கிராமத்தில் இருந்தபோது இரவு 8.20 மணிக்கு ஊரில் இருந்தபோது விபத்து பற்றி கேள்வி பட்டு விஐடி மெயின் கேட்டை அருகே சென்று பார்த்தேன். சம்பவ

இடத்தில் சாம்சன் அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார், அவருக்கு தலையில் அடிப்பட்டு இருந்து. சம்பவ இடத்தில் புல்லட் வாகனம் இருந்தது. மற்றொரு ஆக்டிவா வாகனம் இருந்தது. பின்னர் காயம்பட்டவரை மீட்டு வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அன்றைய தினம் சாம்சன் இறந்து விட்டதாக தகவல் வந்தது. இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள். பின்னாளில் ஆக்டிவா இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அறிந்துகொண்டேன்.

அ.சா.3 ராபின்ராஜ்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன் என்றும் டிரைவராக வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1, அ.சா.2 யை தெரியும். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம் தேதி தான் தன்னுடைய வழக்கமான பணிக்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் இறந்து போன சாம்சன் என்பவரின் தாயார் செல்வி தனக்கு போன் மூலமாக தன் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் தான் தன் மனைவியும் சம்பவம் இடம் சென்று பார்த்த போது ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது. சாம்சனை மருத்துவமனைக்கு அழைத்து சென்று இருந்தார்கள். தான் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் போலிசார் உடற்கூராய்வு செய்வது சம்பந்தமாக தன்னை

விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 சகாயம் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். மரத்தச்சராக வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 அ.சா.2 யை தெரியும். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம்தேதி தான் தன் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்த போது இரவு 8.30 மணியளவில் விபத்து ஏற்பட்டதை தெரிந்து கொண்டு விஜடி மெயின் கேட்டை அருகே சென்று பார்த்த போது சம்பவ இடத்தில் ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது. சம்பவ இடத்தில் கூட்டமாகவும் காவல்துறை சார்ந்தவர்களும் இருந்தார்கள். பின்னர் அன்றைய தினமே சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் உடற்கூராய்வு செய்வதற்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் தன்னை போலிசார் விசாரித்தார்கள். விபத்தை ஏற்படுத்தியவர் உணவு விநியோகம் செய்பவர் என்று பின்னாளில் தெரிந்து கொண்டேன்.

அ.சா.5 பால்சன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். சென்னை சங்கர நேத்திரலாய மருத்துவமனையில் தொழில்நுட்ப பிரிவில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தனது தந்தை. விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவர் தனது தம்பி. 27.09.2021

ம் தேதி தான் தன் வீட்டில் இருந்த போது தன்னுடைய தம்பியின் நண்பர் தனக்கு போன் மூலமாக தகவல்சொன்னார். தான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். தன்னுடைய தம்பி சுய நினைவின்றி இருந்தார். அவருக்கு மூக்கு, காது, வாயில் இருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. சம்பவ இடத்தில் சோமோடோ விநியோகம் செய்பவர்கள் கூட்டமாக இருந்தார்கள். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக தனது தம்பியை சிஎம்சி மருத்துவமைனக்கு அழைத்து சென்றோம். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் சம்பவ இடத்தை விசாரித்து அளவீடு செய்து கொண்டிருந்தார்கள் தன்னுடன் முத்து என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள்.

அ.சா.6 இளங்கோவன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். நிலம் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம் தேதி தான் தன்னுடைய வீட்டில் இருந்த போது தன்னுடைய சம்பந்தி புருஷோத்தமன் என்பவர் போன் மூலமாக சாம்சனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தான் அன்றைய தினம் இரவு 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்த போது சாம்சன் மீட்டு வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளார்கள்.

தான் சென்று பார்த்த போது சாம்சன் இறந்த நிலையில் காணப்பட்டார் தலையில் காயம் ஏற்பட்டது. பிறகு அங்கிருந்து வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளார்கள். அங்கு சாம்சன் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்தார்கள். தான் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். இந்த விபத்து ஏற்படுத்தியவர் ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஓட்டுநர் என்பதை பின்னாளில் தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 முத்து இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். சிஎம்சி மருத்துவமனையில் வேலை செய்து வருகிறனே் என்றும், விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரைத் தெரியும். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக காவல்நிலையத்தில் வைத்து விபத்து காரணமாக கையொப்பம் செய்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.8 தயாளன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின்

சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் ஆனதால் குவிமுச 311 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு கூடுதல் சாட்சியமாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.09.2021 ம் தேதி இரவு 20.45 மணிக்கு உதவி ஆய்வாளர் பரமசிவம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது புருஷோத்தமன் த/பெ வேலு என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகாரின் தன்மைபடி நிலைய குற்ற எண்.556/2021, சட்டப்பிரிவுகள் 279,337 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், முதல் தகவல் அறிக்கையும் புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அதே நாள் 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பால்சன் மற்றும் முத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், அது முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் விபத்தில் காயம்பட்டு சிகிச்சைக்காக சென்ற சாம்சன் என்பவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியதன் அடிப்படையில் சட்டப்பிரிவை 279,337 இதச பிரிவில் இருந்து 279, 304(A) இதச பிரிவு ஆக மாற்றம் செய்யப்பட்டு பிரிவு

மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவ கல்லுரி மருத்துவமனைக்கு முதல் நிலை காவலர் சதீஷ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். பின்னர் விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவர் உடலின் மீது வேலூர் அடுக்கம்பாறை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் சாட்சிகளான விஜயகுமார், அசோகன், கிறிஸ்டோபர், தாமஸ் விக்டர் ராஜ், சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார்.அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் வழக்கு கோப்பபை காவல் ஆய்வாளர் ஆனந்தன் என்பவர் தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை விசாரணை செய்ததில் முதல் புலன் விசாரணை அலுவலரிடம் கூறியதையே மீண்டும் அவரிடம் கூறியதால் தனியாக மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இறந்து போன சாம்சன் என்பரின் உடலின் மீது 28.09.2021 ம் தேதி மருத்துவமனையில் வைத்து உடற்கூராய்வு செய்த மருத்துவர் கோபிகிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உடற்கூராய்வு சான்றிதழ பெற்றுள்ளார். அந்த உடற்கூறாய்வு சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு

செய்யப்படுகிறது என்றும், பின்னர் சாட்சிகள் புருஷோத்தமன், செல்லதுரை, இளங்கோவன், ராபின் ராஜ்குமார். சகாயம், முத்து, பால்சன், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரி பெரியண்னன் என்பவர் காவல் நிலையம் முன்னிலையானவரை 20.10.2021 ம் தேதி காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய Honda Activa TN10 BF 9925 இருசக்கர வாகனத்தையும், விபத்துக்குள்ளான Royal Enfield TN23 CQ 4087 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருணாநிதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இரண்டு வாகனங்களுக்கும் விபத்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அந்த ஆய்வறிக்கை Honda Activa TN10 BF 9925 இருசக்கர வாகனத்துடையது. அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது Royal Enfiled TN 23 CQ 4087 என்ற வாகனத்துக்குடையது அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 02.11.2021 ம் தேதி 279, 304(A) இதச பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றைத் தொகுத்து

எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதம்**

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம், காட்பாடி TO திருவலம் ரோடு காட்பாடி VIT அருகில் சுமார் இரவு 8.15 மணிக்கு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ராயல் என்பீல்டு TN–23–CQ–4087 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்க்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் Honda Activa TN–10–BF–9925 என்ற வாகனத்தை ஒட்டுனர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த சாம்சன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் பிரிவு 279,337 இதச படியும் அதே சம்பவத்தில் சாம்சன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என முடிவு செய்து

அதிகபட்ச சிறைதண்டனையும், அபராதமும் விதிக்குமாறு வாதம் செய்தார்.

## 7. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம்

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கண்ணுற்று சாட்சியை விசாரித்தபோதிலும் அவர் எதிரிதான் சம்பவத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளப்படுத்தவில்லை என்றும் நடந்த விபத்தில் காட்பாடி TO திருவலம் ரோடு காட்பாடி VIT அருகில் சுமார் இரவு 8.15 மணிக்கு மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ராயல் என்பீல்டு TN-23-CQ-4087 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்க்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் Honda Activa TN-10-BF-9925 என்ற வாகனத்தை ஓட்டுனர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த சாம்சன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் அதே சம்பவத்தில் சாம்சன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பில் திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் இறந்து போனவரின் குடும்பத்திற்கு விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக

எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிடவேண்டுமென வாதம் செய்தார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சார்ந்ததாகும். எதிரி அவரின் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும, ஓட்டி வந்து சாம்சன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு மரணம் ஏற்பட்டுள்ளதா என்பது தான் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமாகும்.

10. அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கேள்விபட்ட சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்து போன சாம்சன் தனது இளைய மகன். 27.09.2021 ம் தேதி தனது மகன்

சிஎம்சி மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்தார். பணி முடித்து சிஎம்சி மருத்துவமனையில் இருந்து சேவூர் நோக்கி புல்லட் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும்போது விஜடி மெயின் கேட்டை அருகே வரும்போது ஒருவர் வந்து இடித்து விட்டார் என அங்கிருந்தவர்கள் தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தானும் தனது மனைவியும் சம்பவ இடம் சென்று பார்த்து போது தனது மகன் தலையில் அடிப்பட்டு மயங்கிய நிலையில் காணப்பட்டார். பின்னர் ஆம்புலன்ஸ்மாக வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு தனது மகன் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். பின்னாளில் சோமோடோ விநியோகம் செய்பவர் விபத்து ஏற்படுத்தியதாக கேள்விபட்டேன். சம்பவம் தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான் என்றும் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.2 அ.சா.3 அ.சா.4 மற்றும் அ.சா.6 கேள்விபட்ட சாட்சிகள் ஆவார்கள். அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 27.09.2021 ம் தேதி தான் தனது கிராமத்தில் இருந்தபோது இரவு 8.20 மணிக்கு ஊரில் இருந்தபோது விபத்து பற்றி கேள்வி பட்டு விஜடி மெயின் கேட்டை அருகே சென்று பார்த்தேன். சம்பவ

இடத்தில் சாம்சன் அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார், அவருக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது. சம்பவ இடத்தில் புல்லட் வாகனம் இருந்தது. மற்றொரு ஆக்டிவா வாகனம் இருந்தது. பின்னர் காயம்பட்டவரை மீட்டு வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அன்றைய தினம் சாம்சன் இறந்து விட்டதாக தகவல் வந்தது. இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள். பின்னாளில் ஆக்டிவா இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அறிந்துகொண்டேன். அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 27.09.2021 ம்தேதி தான் தன்னுடைய வழக்கமான பணிக்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் இறந்து போன சாம்சன் என்பவரின் தாயார் செல்வி தனக்கு போன் மூலமாக தன் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் தான் தன் மனைவியும் சம்பவம் இடம் சென்று பார்த்த போது ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது. சாம்சனை மருத்துவமனைக்கு அழைத்து சென்று இருந்தார்கள். தான் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் போலிசார் உடற்கூராய்வு செய்வது சம்பந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில் 27.09.2021 ம்தேதி தான் தன் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்த போது இரவு 8.30 மணியளவில் விபத்து ஏற்பட்டதை தெரிந்து கொண்டு விஜடி மெயின் கேட்டை அருகே சென்று

பார்த்த போது சம்பவ இடத்தில் ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது. சம்பவ இடத்தில் கூட்டமாகவும் காவல் துறை சார்ந்தவர்களும் இருந்தார்கள். பின்னர் அன்றைய தினமே சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் உடற்கூராய்வு செய்வதற்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் தன்னை போலிசார் விசாரித்தார்கள். விபத்தை ஏற்படுத்தியவர் உணவு விநியோகம் செய்பவர் என்று பின்னாளில் தெரிந்து கொண்டேன். அ.சா.6 தனது சாட்சியத்தில் 27.09.2021 ம் தேதி நான் என்னுடைய வீட்டில் இருந்த போது என்னுடைய சம்பந்தி புருசேத்தமன் என்பவர் போன் மூலமாக சாம்சானுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தான் அன்றைய தினம் இரவு 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்த்த போது சாம்சன் மீட்டு வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளார்கள். தான் சென்று பார்த்த போது சாம்சன் இறந்த நிலையில் காணப்பட்டார் தலையில் காயம் ஏற்பட்டது. பிறகு அங்கிருந்து வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளார்கள். அங்கு சாம்சன் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்தார்கள். தான் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். இந்த விபத்து ஏற்படுத்தியவர் ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஓட்டுநர் என்பதை பின்னாளில் தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்,

சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.5 மற்றும் அ.சா.7 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 27.09.2021 ம்தேதி தான் தன் வீட்டில் இருந்த போது தன்னுடைய தம்பியின் நண்பர் தனக்கு போன் மூலமாக தகவல்சொன்னார். தான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். தன்னுடைய தம்பி சுய நினைவின்றி இருந்தார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக தனது தம்பியை சிஎம்சி மருத்துவமைனக்கு அழைத்து சென்றோம். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் போலிசார் சம்பவ இடத்தை விசாரித்து அளவீடு செய்து கொண்டிருந்தார்கள் தன்னுடன் முத்து என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். அ.சா.7 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக காவல்நிலையத்தில் வைத்து விபத்து காரணமாக கையொப்பம் செய்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.8 இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் புகார்தாரரின் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததைப் பற்றியும், சம்பவம் இடம்

சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததை பற்றியும், இறந்த நபர்களுக்கு பிரேத விசாரணை செய்ததததை பற்றியும், மோட்டார் சான்று பெற்று அவரிடம் விசாரணை செய்ததை பற்றியும், பஞ்சாயத்தார் அறிக்கை தயார் செய்தது பற்றியும், இறந்த நபர்களுக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சான்று பெற்றதை பற்றியும், பிரேத பரிசோதனை முடித்து உரியவரிடம் ஒப்படைத்தேன் என்றும், இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

14. இவ்வழக்கில் எதிரியை அடையாளபடுத்தி எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 புகார்தாரர் ஆவார். அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.4 மற்றும் அ.சா.6 கேள்விப்பட்ட சாட்சிகள் என்ற அடிப்படையிலும், அ.சா.5 மற்றும் அ.சா.7 பார்வை மகஜர் சாட்சிகள் என்ற அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளனர். புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி மீதான குற்றத்தை நிரூப்பிக்கப்பட இயலவில்லை.

15. இந்த வழக்கில் விபத்தை நேரிடையாக பார்த்த கண்ணுற்ற சாட்சியும், எதிரியை அடையாளப்படுத்தி சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. அது மட்டுமல்லாது எதிரியை யாரும் அடையாளம் காட்டி எதிரிதான் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனராக இருந்தார் என்றும், மேற்படி ராயல்

என்பீல்டு TN–23–CQ–4087 என்ற வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்க்கு நோக்கி வந்த இருசக்கர வாகனம் Honda Activa TN–10–BF–9925 என்ற வாகனத்தை ஒட்டுனர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த சாம்சன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் பிரிவு 279,337 இதச படியும் அதே சம்பவத்தில் சாம்சன் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வலியுறுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக யூகித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, மேலே கண்ட காரணங்களினால் அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிப்பது நீதி நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

16. முடிவாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) IPC –ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 06 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU
நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | புருஷோத்தமன் |
| அ.சா.2 | செல்லத்துரை |
| அ.சா.3 | ராபின்ராஜ்குமார் |
| அ.சா.4 | சகாயம் |
| அ.சா.5 | பால்சன் |
| அ.சா.6 | இளங்கோவன் |
| அ.சா.7 | முத்து |
| அ.சா.8 | தயாளன்(விசாரணை அதிகாரி) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | உடற்கூறாய்வு சான்று |
| அ.சா.ஆ.10 | வாகன ஆய்வறிக்கை (Honda Activa TN 10 BF 9925 (இருசக்கர வாகனம்) |
| அ.சா.ஆ.11 | வாகன ஆய்வறிக்கை (Royal Enfield TN23 CQ 4087 (இருசக்கர வாகனம்) |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**<u>குறிப்பு</u>**

1.வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3.விசாரணை காலத்தில் எதிரி காவல் நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.